JUDICIAL FORM NO.53

{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 312/2018 |
| | : | Prosecution P.W – 1 |
| NAME | : | Kuthalingam |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday of 24.05.2022.

முதல் விசாரணை

நான் குறும்பலபேரியில் குடியிருந்து வருகிறேன், நான் விவசாயம் செய்து வருகிறேன், எனக்கு ஆஜர் எதிரியை தெரியும். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு நான் பாவூர்சத்திரத்திலுள்ள உத்தமன் கடைக்கு டீ குடிக்க காலை 09.00 மணிக்கு நானும் சந்திரமோகன்,சிவன்ராஜ், வந்திருந்தோம், நாங்கள் டீ குடித்துவிட்டு ஆட்டோ ஸ்டாண்டில் வைத்து மூவரும் பேசிக்கொண்டிருந்தோம்,அப்போது அங்கு வந்த ஆஜர் எதிரி மாதவன் என் கழுத்தில் அரிவாளை வைத்து மிரட்டி என் சட்டைப்பையில் இருந்த ரூபாய் முன்னூறுறை பறித்துக்கொண்டு, ரோட்டில் போய் நின்று தலைக்கு மேல் அரிவாளை சுற்றிக்கொண்டு, யாராவது பக்கத்தில் வந்தால் வெட்டிவிடுவேன் என்று எங்களுக்கு கொலை மிரட்டல் விடுத்தார் அதனால் எங்களுக்கு உயிர்பயம் ஏற்பட்டதால் அந்த கடைப்பக்கம் பதுங்கி கொண்டோம். அந்த

பக்கத்திலுள்ள கடைகள் எல்லாம் அடைத்துவிட்டார்கள். ரோட்டில் பைக்கை ஒட்டி வந்தவர்கள் எல்லாம் திரும்பி போய்விட்டார்கள். என்னால் அந்த அரிவாளை அடையாளம் காட்டமுடியும், நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் அரிவாளால்தான் ஆஜர் எதிரி என்னை மிரட்டினார், அந்த அரிவாள் அ,சா,பொ.1 ஆக குறீயீடு செய்யப்படுகிறது. அதன் பின்பு 10.00 மணிக்கு நான் பாவூர்சத்திரம் காவல்நிலையம் சென்று புகார் மனு கொடுத்தேன், என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான், அந்த புகார் மனு அ,சா,ஆ,1 ஆக குறீயீடு செய்யப்படுகிறது. மேற்படி பணத்தை நான் இந்நீதிமன்றத்தில் மனு செய்து போட்டோ மற்றும் சி,டி எடுத்துக்கொண்டு பணத்தை பெற்றுக்கொண்டேன்,அந்த போட்டோ ( 1 எண்ணம் ) மற்றும் சி, டி, அ,சா,பொ,2 மற்றும் அ,சா,பொ3, ஆக குறீயீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

JUDICIAL FORM NO.53

{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 312/2018 |
| | : | Prosecution P.W – 2 |
| NAME | : | Sivan raj |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday of 24.05.2022.

முதல் விசாரணை

நான் குறும்பலபேரியில் குடியிருந்து வருகிறேன், நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன், எனக்கு புகார்தாரர் குத்தாலிங்கத்தை தெரியும். எனக்கு ஆஜர் எதிரியை தெரியும். கடந்த ஐந்து வருடங்களுக்கு முன்பு காலை 09.000 மணிக்கு நானும் சந்திரமோகன் மற்றும் குத்தாலிங்கம் ஆகியோரும் சேர்ந்து பாவூர்சத்திரத்திலுள்ள உத்தமன் டீ க்கடையில் டீ குடித்து விட்டு வடபுறம் உள்ள ஆட்டோ ஸ்டாண்டில் நின்று பேசிக்கொண்டிருக்கும் போது அங்கு வந்த ஆஜர் எதிரி மாதவன் குத்தாலிங்கம் கழுத்தில் அரிவாளை வைத்துக்கொண்டு அவரதுசட்டைப்பையில் உள்ள முன்னூறு ரூபாய் எடுத்துக்கொண்டார், நானும் சந்திரமோகனும் ரூபாயயை ஏன் எடுத்தாய் என்று எதிரி மாதவன் கேட்டதற்கு எதிரி எங்களையும் வெட்டிவிடுவேன் என்று மிரட்டினார், எதிரியின் செய்கையால்

ரோட்டில் சிறிது நேரம் போக்குவரத்து தடைப்பட்டது, அது குறித்து நடவடிக்கை எடுக்க குத்தாலிங்கம் பாவூர்சத்திரம் காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்தார். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.